DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 316/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : பைரோஸ் (மருத்துவர்) (P.w.7)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of December 2025

(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 12.09.2020ம் தேதியன்று மதியம் 12.30மணியளவில் திருச்சுழி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சிகிச்சைக்கு வந்த சுப்பிரமணி மகள் வள்ளி மயில் என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை தெரிந்த 3 நபர்கள் மரக்கட்டை மற்றும் கையால் அன்று காலை 9.00மணிக்கு Rice field அருகில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது வலது முழங்கையில் வலி இருப்பதாக கூறினார். அவரை வெளிநோயாளியாக முதலுதவி சிகிச்சை அளித்து அருப்புக்கோட்டை அரசு

மருத்துவமனைக்கு நுண் கதிர் படம் எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டார். எலும்புமுறிவு மருத்துவர் அவருக்கு எலும்பு முறிவு இல்லை என்று தெரியவந்ததால் அன்றைய தினம் பணி மருத்துவராக இருந்த சந்திரலேகா என்பவர் வழங்கிய சான்று அறிக்கையின்படி நானும் சாதாரணக்காயம் என சான்று வழங்கினேன். (**அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவர் அளித்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ் அசாஆ4 மற்றும் நான் வழங்கிய காயச்சான்று அசாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

12.09.2020ம் தேதியன்று மதியம் 12.30மணியளவில்தான் திருச்சுழி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்தார்கள் என்றால் சரிதான். சிகிச்சைக்கு யார் அவரை அழைத்து வந்தார் என்ற குறிப்புகள் உள்ளதா என்றால் இல்லை. மணி என்ற நபர் தன்னை அழைத்து வந்து சிகிச்சைக்கு சேர்த்ததாக எதுவும் தெரிவித்தாரா என்றால் அவரை நான் வெளிநோயாளியாக தான் சிகிச்சை அளித்தேன். நரிக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி பெற்று விட்டுதான் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கு வந்தார் என்றால் சரிதான். அசாஆ5 விபத்து பதிவேட்டில் நரிக்குடியில் வெளிநோயாளியாகதான் சிகிச்சை பெற்றார் என்ற குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். நான் வழங்கிய அசாஆ5 விபத்து பதிவேட்டிலும் வெளிநோயாளியாகதான் சிகிச்சை பெற்றார் என்ற குறிப்புகள் உள்ளது என்றால் சரிதான். திருச்சுழி மருத்துவமனையில் நுண்கதிர் படம் எடுக்கும் வசதி இல்லாததால்தான் அவரை அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். Tendernes என்பது என்ன என்றால் அதிகபடியான வலி என்று அர்த்தம். அதிகமாக வலிக்கிறது என்று சொல்வது நடிப்பாக கூட இருக்கலாம் என்றால் சரிதான். Rice Filed என்பது அரிசி காயப்போடும் பகுதி என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. காயங்கள்

உயரமான பகுதியில் நடந்து செல்லும்போது கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.